| முதல் இடைப்பருவத் தேர்வு - 2024 | தேர்வு எண் |
|---|---|

காலம் : 1-30 மணி **XII - தமிழ்** மதிப்பெண் : 50

## பகுதி - 1

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். (8x1=8)

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக்காரிகை
   ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம்
   ஈ) நன்னூல்
2. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
   தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்
   அ) அடிமோனை, அடி எதுகை
   ஆ) சீர்மோனை, சீர் எதுகை
   இ) அடி எதுகை, சீர் மோனை
   ஈ) சீர் எதுகை, அடிமோனை
3. பேச்சுத் தமிழில் அமைந்தத் தொடரைத் தேர்க
   அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
   ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது
   ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன
4. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
   அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் தள்ளுதல்
   இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்
5. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
   இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
6. Manuscript கலைச்சொல்லாக்கம் தருக
   அ) நூல் நிரல் ஆ) கையெழுத்துப் பிரதி
   இ) புனைவு ஈ) காப்பகம்
7. <u>**பொய்யா வானம்**</u> புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு
   அ) வினைத்தொகை
   ஆ) உரிச்சொல் தொடர்
   இ) பண்புத்தொகை
   ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
8. யார்? அது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே ________
   அ) அஃறிணை, உயர்திணை
   ஆ) உயர்திணை, அஃறிணை
   இ) விரவுத் திணை, அஃறிணை
   ஈ) விரவுத்திணை, உயர்திணை



www.Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - 2

*குறிப்பு: எவையேனும் ஐந்தனுக்கு குறுகிய விடையளிக்க.* *(5x2=10)*

9. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
10. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?
11. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
12. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
13. விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.
14. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

## பகுதி - 3

*குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க. (குறுவினா)* *(3x4=12)*

15. பொருள் வேற்றுமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
16. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் விளக்குக.
17. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
18. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

## பகுதி - 4

*குறிப்பு: எவையேனும் ஒன்றனுக்கு விடையளி.* *(1x6=6)*

19. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) "நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து" என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்தெழுதுக.

## பகுதி - 5

*குறிப்பு: மொழித்திறன் வினாக்கள்.* *(5x2=10)*

*20. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.*

அ) வானமெல்லாம்

ஆ) இனநிரை

*21. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபதஉறுப்பிலக்கணம் தருக.*

அ) சாய்ப்பான்

ஆ) அசைத்து

*22. தமிழாக்கம் தருக.*

அ) A new language is a new life.

ஆ) The limits of my language are the limits of my world.

*23. உவமைத் தொடர்களை சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.*

'உள்ளங்கை நெல்லிக்கனிபோல'

*24. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*

அலை, அழை

## பகுதி - 6

*குறிப்பு: அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.* *(1x4=4)*

25. "ஓங்கலிடை வந்து உயர்ந்தோர்......" - என்றப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com